யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 08
## First Term Examination – 2020 – Grade 08

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |

சுட்டெண் Index No

## தமிழ் மொழியும் இலக்கியமும்

பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

**1 – 25 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. வீட்டின் முற்றத்தில் அழகிய விருட்சம் நின்றது. இங்கு விருட்சம் என்பதன் ஒத்த பொருள்
    1. வேம்பு 2. ஆரணியம் 3. பலா 4. மரம்

02. மன்மதன் கரும்பு வில் வளைத்தான். கரும்பு என்பதன் ஒத்த பொருள்
    1. கதம்பம் 2. கன்னல் 3. வளைவு 4. இனிமை

03. புலவரிடம் கூடப்பிறந்தது வறுமை. வறுமை ஏ்னபதன் எதிர்ப்பதம்
    1. செல்வம் 2. துன்பம் 3. அல்லல் 4. கர்வம்

04. பின்வருவனவற்றில் குணப்பெயராக அமைவது
    1. மரம் 2. நடத்தல் 3. இனிமை 4. பாடல்

05. காரண இடுகுறிப் பெயராக அமையும் சொல்
    1. முள்ளி 2. மரம் 3. மலை 4. அணி

06. ‘‘ஈமெயில்’’ என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான கலைச் சொல்
    1. இணையம் 2. பேஸ்புக் 3. இன்ரநெற் 4. மின்னஞ்சல்

07. பாணன் என்ற ஆண் பாலிற்குரிய பெண்பால் சொல்
    1. பாணி 2. பாணினி 3. பாடினி 4. பாடிணி

08. கல் + தூண் என்பதை புணர்த்தி எழுதினால்
    1. கல்தூண் 2. கட்தூண் 3. கற்றூண் 4. கல்த்தூண்

09. பாரதியார் சிறந்த புலவர். இவ்வாக்கியத்தின் பயனிலை
    1. பாரதியார் 2. புலவர் 3. சிறந்த 4. பாடல்

10. உயிர்மெய்க்குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை
    1. 90 2. 95 3. 216 4. 18

11. இடையின எழுத்துக்களைக் கொண்ட எழுத்துத் தொகுதி
    1. க, ச, ட,த 2. ய, ர, ல, வ 3. ஞ், ன், ந், ம் 4. ற், த், ழ், வ்



kalvi.lk

12. பின்வருவனவற்றுள் புறச்சுட்டாக அமையும் சொல்
1. அது 2. இது 3. அவன் 4. அம்மனிதன்

13. கள்ளக்கந்தன் வெள்ளைக் கோழியைப் பிடித்தான் இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் அடைமொழியாக அமைவது.
1. கள்ள 2. வெள்ளை 3. கந்தன் 4. பிடித்தான்

14. தேன், கள், குற்றம், வாசனை எனும் பொருள் தரும் ஒரு சொல்
1. நறை 2. மாண்பு 3. பெருமை 4. மணம்

15. மாணவர்கள் "கலகல" வெனச் சிரித்து மகிழ்ந்தனர். கலகல என்பது
1. அடுக்கிடுக்குத் தொடர் 2. இணைமொழி 3. இரட்டைக்கிளவி 4. பெயர்ச்சொல்

16. முப்பதாவது ஆண்டின் நிறைவு விழா
1. முத்துவிழா 2. பவளவிழா 3. வைர விழா 4. வெள்ளி விழா

17. சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்
1. கலாச்சாரம் 2. பிரசாரம் 3. இளனி 4. பாவக்காய்

18. இறந்தகால இடைநிலை எழுத்துக்களாக அமைவன
1. ப், வ், ம் 2. த், ட், ற், இன் 3. கின்று, கிறு, ட் 4. ப், வ், ட்

19. குறிப்பு வினைமுற்றிற்கு உதாரணமாக அமைவது
1. உண்பான் 2. கரியன் 3. வந்தனன் 4. கற்றான்.

20. சிவபூசையில் கரடி புகுந்தது போல என்ற உவமைத் தொடரின் பொருள்
1. நன்மை செய்தல் 2. நன்மைக்கு இடையூறு
3. தீமையை நாடுதல் 4. சிவபூசை செய்தல்

21. முடிக்கும் சொல்லை தெரிவு செய்க
வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் மக்கள்.............................
1. பாதிப்படைவர் 2. பாதிப்படைந்தனர் 3. பாதிப்பர் 4. பாதிப்படைவார்கள்

22. கெடுதல் புணர்ச்சிக்கு உதாரணமாக அமைவது
1. மரப்பெட்டி 2. புலித்தோல் 3. நீலவானம் 4. மாவிலை

23. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
1. செல் 2. எழுது 3. அழுது 4. நடி

24. செயப்படுபொருள் குன்றிய வினையாக அமையும் சொல்
1. உண்டான் 2. எழுதினான் 3. நடந்தான் 4. பாடினான்

25. ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்பதன் பொருள்
1. அழுகை 2. கூர்மை 3. பகை 4. மிகத்துன்பம்

(25x1=25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக
    1. பாழடைந்த வீடு ஒன்றின் சுயசரிதை
    2. நீர் விரும்பும் பெரியார்
    3. தொலைத்தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு
    4. ஆங்கிலக்கல்வியின் அவசியம்

(20 புள்ளிகள்)

02. உமது பாடசாலையில் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டி பற்றி கொழும்பில் வாழும் மாமனாருக்கு 75 சொற்களில் கட்டுரை எழுதுக.

(15 புள்ளிகள்)

03. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
    1. வியாபாரியின் கோபம் என்ற கதையை எழுதியவர் யார்?
    2. "கான்ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனவன்" யார்?
    3. கம்பர் காப்பியத்தில் அதிக பாடல்களில் பாடப்பட்டவர் யார்? ஒரு பாடலில் பாடப்பட்டவர் யார்?
    4. கட்டுரையின் வகைகள் 2 தருக?
    5. அராபர்ட் புரூஸிற்கு ஏற்பட்ட ஐயப்பாடு யாது?

(5x3=15 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களை பொருள் புலப்படுமாறு வாக்கியம் அமைத்து எழுதுக
    1. முருகு
    2. திரை
    3. செறு
    4. சுக்கான்
    5. இளிவரல்

(5x2=10 புள்ளிகள்)

05. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் வழுக்களைத் திருத்தி எழுதுக
    1. நலன்புரிச்சங்கம் வாழ்த்தியது
    2. பல்களைக்களகம் போனோம்
    3. அனை கடந்த வெல்லம்
    4. கூட்டத்துக்கு சமூகமளித்தார்.
    5. தமிளரின் கலாச்சாரத்தை பேன வேண்டும்.

(5x3=15 புள்ளிகள்)



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL MEDIUM

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

GRADE 8

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

FREE ADMISSION

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- Spoken English Classes.
- Sinhala Reading and Writing Classes.
- Map Marking Classes

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page